# இலக்கியம் எடுத்தியம்பும் திருமணம்

*முனைவர் கு. பிருந்தா*
உதவி பேராசிரியர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5215

## முன்னுரை

பண்பாட்டின் நெறிமுறை வழுவாது காத்து நிற்கும் சடங்கு முறை திருமணம். ஆதி தமிழர்கள் பழங்காலம் முதல் இன்று வரை தொன்றுத் தொட்டு காத்து வரும் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று திருமணம். இரு மனங்களின் அன்பு ஒருமித்து வாழ்வது. காலம் காலம் தொட்டு இன்று வரை பல வடிவில் மாற்றம் பெற்று நம் மண்ணின் பெருமையை நிலை நாட்டும் ஒழுகலாறு.

## திருமணம்

மனிதனால்மனிதசமுதாயத்தின்நலன்கருதிப்படைக்கப்பட்டஒழுக்க முறை திருமணம். ஒவ்வொரு சமுதாயத்திலும் வெவ்வேறு முறையாக அவரவர் பண்பாட்டிற்கு ஒத்த முறையில் வகுத்து, நெறிமுறைகள் தவறாது “திருமணம்” என்ற ஒழுகலாறுகளைக் கடைபிடித்து சமுதாய எழுச்சிக்கு ஒரு உந்துதலாக இவ்வொழுகளாறுகளை காலம் காலமாக சமுதாய மாற்றத்திற்கு ஒத்த முறையில் வாழ்க்கை நெறிமுறைகளை வாழ்க்கையின் அடித்தளமாக பின்பற்றி வருகின்றனர் .

**“மணம்” என்பது இரு மனங்களின் கலப்பு .**

**“கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து வாழ்வதே வாழ்க்கை”**

**- பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்**
**(தொல்காப்பியர் முதல் சித்தர் வரை- பெண்களின் சித்தரிப்பு)**

இருமனம் கலந்து ஒரு மனம் இரு உடலாக நின்ற உலகின் பண்பாட்டின் உயர்ந்த கொள்கை நிலைநாட்டுவன.

**“ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை”**

***- கலித்தொகை . பாடல் 18***

ஒவ்வொரு குடும்பத்தின் உயர்ந்த நிகழ்வு திருமணமாகும். இன்னும் ஒரு படி மேலே செல்ல குடும்ப நிகழ்வின் கும்பாபிஷேக விழா என்றே சொல்ல வேண்டும்.

## திருமணம் வேற்று பெயர்கள்

கரணம், வரைவு கடாதல், கற்புமணம், வதுவைச்சடங்கு, மன்றல், உடன்போக்கு மணம் என்றெல்லாம் திருமணம் என்ற சொல்லிற்கு வேறு பெயர்களால் அழைத்துள்ளனர் நம் முந்தைய தமிழர்கள்.

*வரைவு கடாதல் - பெற்றோர் ஒப்புதலுடன் திருமணம் செய்து கொள்ளுதல். வது வைச்சடங்கு - சடங்கு முறையுடன் கூடிய திருமணம்*

***மன்றல் - கூடி நிகழ்த்தும் நிகழ்வு***

*உடன்போக்கு மனம் - பெற்றோர் ஒப்புதல் இன்றி ஆண் பெண் இருவரும் காதல் புரிந்தும் செய்த கொள்ளும் திருமணம்.*

*நம் மக்கள் எந்த ஒரு காரணமும் இன்றி பண்பாட்டை வகுத்திருக்க மாட்டார்கள். எல்லாவற்றிற்கும் ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். கற்பு என்ற சொல் திருமண வாழ்க்கையை குறிக்கும் என்கிறார் தொல்காப்பியர்.*

***"கற்பனப்படுவது காரணமொடு பணர"***
**- தொல்காப்பியம். பொருள் அதிகாரம் . (நூற்பா 140)**

***திருமணம் - இருமனம் இணைதல்***

*திருமண வாழ்க்கை இரு மனங்களின் இணைவு ஆகும். இது சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் களவு வாழ்க்கையின் அடுத்தபடி கற்பு வாழ்க்கை. திருமண வாழ்க்கையின் ஆரம்பத்தை கற்பு வாழ்க்கை என்பர். மேலும், கணவன் மனைவி உறவு திடீரென்று ஒரே நாளில் தோன்றுவது அன்று பல பிறவிகளிலும் தொடர்ந்து வருவது என கருதி இருக்கின்றனர். இக்கருத்தை குறுந்தொகை பாடல் ஒன்று நமக்கு தெளிவு படுத்துகின்றது.*

***"இம்மை மாறி மறுமை ஆயினும்***
***நீ ஆகியர் எம் கணவனை***
***யான் ஆகியர் நின் நெஞ்சு நேர் பவளை".***
**- குறுந்தொகை பாடல் 49.**

***திருமண நிகழ்வு வகை***

*திருமணம் 8 வகை நிகழ்ந்ததாக தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.*

**"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"**
**- தொல்காப்பியம் பொருள் அதிகாரம் நூற்பா. 142**

*அவை 1. பிரமம் 2 பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. அசுரம் 6. இராக் கதம் 7 காந்தருவம் 8. பைசாசம் என்பன.*

**வெண்ணூல் சடங்கு**

*திருமணம் நடக்க இருக்கும் பெண்ணுக்கு வெண்ணூல் சூட்டுதல் என்ற சடங்கு நடைபெற்றிருக்கின்றது என்பதை*

**"மென்ப வாகைப் புன்புறத் தவட்டிலை**
**தன்றறு முகையொடு வெண்நூல் சூட்டி"**
***-அகம். 136***

*அகப்பாடல் விளக்குகின்றது.*

***நிச்சயம் செய்தல்***

*"நிச்சயம்" என்ற சொல் திருமணத்திற்கு பேசியிருக்கும் ஆண் பெண் இருவருக்கும் பொருத்தம் பார்த்து பெரியோர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் முன்னிலையில் இன்னார் ஒருவன் இவனுக்கும் இன்னார் ஒருத்தி இவளுக்கும் என இவனுக்கு இவள் என்றும் இவளுக்கு இவன் என்றும் திருமணத் திற்குமுன் பேசி முடிப்பது "நிச்சயம் செய்தல்" ஆகும் . பெற்றோர் பார்த்து நடத்தவிருக்கும் இத்திருமணத்திற்கு முன் நடத்தவிருக்கும் இந்த நிச்சய நிகழ்வில் ஒப்பந்தத்தில் பாரம்பரிய பெரியோர்களின் பெயர்கள் பெற்றோர் பின் மணமக்கள் பெயர் மண ஒலையில் எழுதி ஒப்பந்தம் செய்த அனைவர் முன்னிலையிலும் கையொப்பம் இடுவர். இதுவே நிகழ்வின் முக்கிய அம்சமாக விளங்கும். நிகழ்விற்கு பின் அனைவரும் விருந்து உண்டு வாழ்த்தி செல்வர். இந்நிகழ்வை "ஓலை எடுத்தல் " என்று கூறுவர்.*

**பரிசமளித்தல்**

*பெண்ணுக்கு மணமகன் பரிசளிக்கும் வழக்கம் பண்பட்ட பண்டைக்காலம்*

தொட்டே இருந்திருக்கின்றது அதுவே தொன்று தொட்டு இன்றும் வழக்கமாக இருந்திருக்கின்றது என்பதைக் காணலாம்.

**சான்று**

**"முழங்குகடல் முழவின் முசிறி அன்ன**
**நலம்சால் விளம்பொருள் பணிந்துவந்து**
**கொடுப்பினும்**
**புரையர் அல்லோர் வரையள் இவள் எனத்"**
**- புறம் . 343**

**சிலம்புகழி நோன்பு**

திருமணத்திற்கு முந்தைய நாள் தலைவிக்கு நடத்தப்படும் ஒருவகை சடங்கு முறை. சங்கப் பாடல்களில் சிலம்புகழி நோன்பு பற்றிய பாடல்கள் காணப்படுகின்றது.

பழங்காலத்தில் பெண் குழந்தையாகப் பாலுண்ணும் பருவத்திலே கால்களில் சிலம்பணிவித்திருக்கின்றனர். இப்பெண் வளர்ந்து கன்னியாக இருக்கும் வரை சிலம்பு அணிந்திருப்பாள். பிறகு திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின் திருமணத்திற்கு முன்பாக முதலில் அணிந்திருந்த சிலம்பை அகற்றும் விழா நடக்கும். அந்நாள்களில் இது ஒரு சமுதாய மரபாகக் கடைபிடிக்கப் பட்டிருக்கின்றது. இது சிலம்பு கழி நோன்பு என்ற விழாவாக நடத்தப்பட்டது.

பொதுவாக சிலம்பு கழி நோன்பு மணமகன் அல்லது மணமகள் இல்லத்திலும் திருமண விழா மணமகள் வீட்டிலும் நடந்தது.

மணமகன் வீட்டில் சிலம்பு கழி நோன்பு நடந்தாலும் திருமணம் என் வீட்டில் நடக்க வேண்டும் என பெண்ணின் தாய் கூறுவதை

**"நும்மனை சிலம்பு கழி இய அயரினும்**
**எம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்**
**சொல்லின் எவனோ மற்றே - வெண்வேல்**
**மையர விளங்கிய கழலடிப் பொய்வல்**
**காளையை ஈன்ற தாய்க்கே".**
**- ஐங்குறுநூறு , பாடல். 399.**

என்ற வரிகளால் அறியலாம்.

காலில் சிலம்பு இல்லை என்றால் மணமான பெண் என அர்த்தம்.

**திருமண நிகழ்வு**

திருமணம் இரு மனங்களின் வாழ்வின் உச்ச மகிழ்ச்சி நிலை ஆகும். இந்நன்னாள் மணமக்கள் வாழ்வின் ஆரம்ப நாள் என்பதால் நல்ல நாள் பார்த்து நாள்கள் கோள்கள் கூட பொருந்தி விளங்கும் நாள்களில் நடத்துவர். இந்நன்னாள் கோள்களின் அறிவு பெற்ற ஜோசியரின் கருத்திற்கு இனங்க கூறப்படும் நாளாகும்.

**மணவிழா**

திருமண நாளை ஒரு விழாவாகவே பழந்தமிழர்கள் நடத்தி இருக்கின்றனர். ஒழுங்கு முறையாக நாட்டப்பட்ட கால்கள் மீது பந்தல் அமைக்கப்பட்டது. பந்தல் இருக்கும் இடத்தை சுற்றி புது மணல் பரப்பி, வீடு முழுவதிலும் வண்ணமலர்த் தோரணங்கள், எங்கும் நெய்யிட்ட விளக்கு களின் தீபங்கள் ஏற்றி ஒளி வீச நிறைந்து காணப்பட்டது. மேலும் வாயில் கால்களில் வாழை மரங்கள் கொலைகளோடு நட்டு, மங்கலம் நிகழ்வு என மங்களமான நிகழ்ச்சி இந்த வீட்டில் நடக்கவிருக்கிறது என்பதை வெளிக்கொணரும் விதமாக மங்கள வாத்தியங்களோடு நிகழ்ச்சிகள் ஆரம்பம் ஆகின்றது. நல்ல நாளில் புள் நிமித்தம் (நல்ல நேரம்) பொருந்தி இருக்கும் இனிமையான வேளையில், உரோகிணிக் கூடிய குற்றமற்ற நல்ல நாளில், மணமேடையை அழகுப்படுத்தி, கடவுளை வழிபட்டு தீய கோள்களின் தொடர்பு நீங்க பெற்ற வளைந்த வெண்மையான திங்களை குற்றம் இல்லா புகழ் கொண்ட உரோகிணி என்னும் விண்மீன் அடைந்த நல்ல விடியற்காலை நேரம் மங்கள மகளிர் ஆரவாரத்துடன் சடங்குகளை செய்தனர்.

ஒலிக்கும் மண முரசுடன், பணை முரசும் ஒலிக்க (பல விதமான முழவு போன்ற

முரசுகள் சங்க இலக்கிய பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது.

“தலையில் குடங்களையும் கையில் மண்டை என்னும் கலத்தினையும் ஏந்தி வந்தனர். முன்னே தரவேண்டிய பொருள்களை முன்னே தந்து, பின்னே தரவேண்டிய பொருள்களை பின்னே தந்தனர். புதல்வனே பெற்ற பெண்கள் தூய அணிகலன்களை அணியப்பெற்ற மகளிர் நால்வர் கூடி நின்று,” கற்ப்பினின்று வழுவாது நல்ல பல பேறுகளை கணவனுக்கு தருக. கணவனை விரும்பி அவனால் விரும்பப்படும் சிறப்பினைப் பெறுக என வாழ்த்தி நீரிலிட்ட மலர்களையும் நெல்லையும் தூவி வாழ்ந்தனர்.

**“உளுந்து தலைப் பெய்த**

**------------------------**

**------------------------**

**------------- ஈர் இதழ் அவிர்”**

**- அகநானூறு -பாடல் 86.**

திருமணநாள் முழுவதும் இடைவிடாத உளுந்து கலந்து செய்யப்பட்ட பொங்கல் வழங்கப்பட்டிருக்கின்றது .

இன்றும் இம்மரபு பாரம்பரியமாக தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. இந்த உணவு வழங்கும் முறை இன்றும் தமிழர்களின் பண்பாட்டை தூக்கி நிறுத்து கின்றது என்றே சொல்ல வேண்டும்.

## திருமணம் – நோக்கம்

ஒரு குலம் தளைக்க மூல காரணம் பெண். ஒரு குடும்பத்திற்கு குலம் தழைக்க ஊன்றுகோல் தலைவியாகிய பெண் இன்றி உலகம் அசைவதில்லை. அதைப்போலவே தலைவி ஆகிய பெண் இன்றி குடும்பம் தளைப்பதில்லை. ஆகவே, திருமண விழாவில் மணமக்களை பெரியவர்கள் “வாழையடி வாழையாக வாழ்க” என வாழ்த்துதலை காணலாம். அவளே பண்பட்ட சமுதாயம் உருவாக்க காரணம் ஆகின்றாள்.

குழந்தை இல்லாத பட்சத்தில் அந்த ஆடவன் மறுமணம் செய்து கொள்ளும் மாண்பு சங்க இலக்கியத்தில் ஐங்குறுநூறு பாடல் இச்செய்தியை நமக்கு அளிக்கின்றது.

**“சங்ககாலத்தில் மகப்பேறு கருதி ஆண் இரண்டாம் திருமணம் செய்து கொள்வது நியாயமே என்னும் கொள்கை இருந்திருக்கின்றது”**

**- பத்தினி தெய்வங்களும்,**
**பரத்தையர் வீதிகளும்.**

பெண்ணிற்கு லட்சியமே திருமணம் என்றும் கணவன் காட்டும் வழியில் தான் மனைவி செல்ல வேண்டும் என்றும் பெண் என்பவள் சமுதாயத்தில் தனித்து வாழ முடியாது. எனவேதான் திருமணம் என்ற ஒரு பண்பாடு நிலவியிருக்கின்றது என்ற கருத்தை கலித்தொகை பாடல் ஒன்று மொழிகின்றது.

**“எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்”**

**- கலித்தொகை.**
**பாலைக்கலி பாடல் .9**

## தாலி மரபு

தாலி கட்டுதல் என்பது மணவிழாவில், மணமகன் மணமகளுக்கு கட்டுவதை காணலாம்.

இந்த பண்பாடு பழந்தமிழ் பண்பாட்டில் பொன்னால் கட்டியதாக சான்று இல்லை. ஆனால் அதற்கு பதிலாக வாகை இலையுடன் அருகம்புல்லின் முகையோடு கழங்கினை சேர்த்துக் கட்டிய வெண்ணூல் மணமக்களுக்கு அணிவித்திருக்கும் சான்று அகப்பாடல் தெரிவிக்கின்றது. இந்த அணிகலன் ஒருவித தாலி என பாடலடி விளக்குகின்றது.

தாலியை “இழை” என்ற சொல்லால் அகநானூற்று பாடல் மொழிகின்றது .

**“வால் இலை மகளிர் நால்வர் கூடி”**

**– அகம் .86**

புறநானூற்றில் கரிகாலன் இறந்தபோது “அவன் மகளிர் இழை களைந்தனர் என்ற பாடல் விளக்குகின்றது .

"மெல் இயல் மகளிரும் இழை களைந்தனரே"
- புறம் 224 .

**நிறைவுரை**

இச்சடங்குகள் பண்பட்ட மனம் கொண்ட சமுதாயம் உருவாக்கும் வழி. திருமணம் ஒன்று தான் அன்பு, அறம் தழைக்க மூலக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

நம் பழந்தமிழ் பண்பாட்டில் பொருள் புரியாத வட மொழி மந்திரங்கள் இல்லை, புரோகிதர் இல்லை, எரி ஓம்பல் இல்லை, தீவலம் இல்லை, அம்மி மிதித்தல் இல்லை, அருந்ததி காட்டல் இல்லை, கோத்திரம் கூறல் முதலியன இல்லை என்பதை உணர்ந்து தமிழர் திருமணம் எந்த மூடப் பழக்கத்திற்கும் ஆட்பட்டு இருக்கவில்லை என்பதே உண்மை.

இன்று இப்பண்பாடு இனத்திற்கு இனம் வேறு பட்டு, வேற்று பண்பாடுகள் பல உட்புகுந்து பல மாற்றங்களுடன் வெறும் ஆடம்பர நிகழ்வாக மட்டுமே நடப்பதைக் கண் கூட காண முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. "பத்தினி தெய்வங்களும், பரத்தையர் வீதிகளும்". தொல்காப்பியர்முதல்சித்தர் வரை பெண்களின் சித்தரிப்பு, அருணாசலம் அச்சு சூர்யா அச்சகம், சென்னை முதற்பதிப்பு, ஜூன் 1993 வெளியீடு, சவுத் ஏசியன் புக்ஸ், 61 தாயார் சாகிப் இரண்டாவது சந்து, சென்னை 600002.
2. கலித்தொகை, நச்சி னார்கினியாருரையுடன், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி ,டி. கே. சாலை, சென்னை 600018.
3. குறுந்தொகை, உரையாசிரியர் டாக்டர் புலவர் துரை இராசாராம் எம் ஏ.,பி. டி., டி.லிட்., திருமகள் நிலையம், புதிய எண்: 16 , பழைய எண் 55, வெங்கட் நாராயணா சாலை, தி.நகர் , சென்னை 600 017.
4. ஐங்குறுநூறு, முனைவர் தட்சிணா மூர்த்தி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 - பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600098.
5. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம், (முதல் பகுதி), வாழ்வியல் விளக்கம், புலவர் இரா . இளங்குமரனார் தமிழ் மண் பதிப்பகம், 2 சிங்காரவேலன் தெரு, தியாகராயர் நகர், சென்னை 600017.
6. புறநானூறு, மூலமும் உரையும், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600014.
7. அகநானூறு, மூலமும் உரையும், புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600 014.